
# அருள்மிகு நாகநாதசுவாமி
# திருக்கோயில் (கேது ஸ்தலம்)

நாகநாதன் கோயில் (வாணகிரி அஞ்சல்)
கீழப் பெரும்பள்ளம், தரங்கம்பாடி வட்டம். 609 105
நாகை மாவட்டம்

1954



# தலவரலாறு



உ

சிவமயம்

## முன்னுரை

திருக்கோயில் இல்லாத ஊரைத் திருவிலூர் என்றும், அது 'அடவி காடு' என்றும் அப்பர் பேசுவார். ஆதலின் ஊர் என்றால் அங்கே ஒரு கோயிலேனும் இருந்தே தீரும். அரப்பா, மொகஞ்ச-தாரோ காலத்திலிருந்தே இதனைக் காணுகிறோம். கோயிலைப் பழந்தமிழில் 'குடி' என்று வழங்கினர். இன்றும் தெலுங்கிலும், கன்னடத்திலும் 'குடி' என்ற சொல் கோயிலையே குறிக்கிறது. இறைவன் குடிகொண்ட இடம் குடி. குடியைச் சுற்றி வாழ்ந்த மக்களே குடி மக்கள் எனப்பட்டனர். ஆதலின் நமது சமூகத்தின் வரலாறும் பண்பாடும் கோயிலைச் சார்ந்ததாகவே உள்ளது.

இத்தகைய கோயில்கள் தமிழகத்தில் மட்டும் 36,000 க்கும் மேல் உள்ளனவாம். காவிரிபூம்பட்டினம் சோழர்களின் தலை நகராகத் திகழ்ந்தபோது இங்குப் பல கோயில்கள் இருந்துள்ளன. அவைகளுள் பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருவலம்புரம் ஆகிய தலங்களில் உள்ள திருக்கோயில்கள் இன்றும் சிறப்புடன் திகழுகின்றன.

கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பின், பிற்காலச் சோழர்களின் ஆட்சியின்போதும் இப்பகுதியில் பல கோயில்கள் கட்டப்பெற்றுள்ளன. அவைகளுள் ஒன்றுதான் கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில். இக்கோயில் பூம்புகாரின் வணிகவர் வாழ்ந்த பகுதியான வாணகிரிக்கு மேற்கே, திருவலம்புரம் என்னும் மேலப் பெரும்பள்ளத்திற்குக் கிழக்கே உள்ள கீழப்பெரும்பள்ளத்தில் உள்ளது. கோயில் இருக்குமிடம் நாகநாதன் கோயில் என்று அழைக்கப்படுகிறது. கேதுவை வழிபட இக்கோயிலுக்குப் பக்தர்கள் பெருமளவில் வருகின்றனர்.

பக்தர்களின் வசதிக்காக, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தம் ஆளுகையில் உள்ள திருக்கோயிலுக்குத் தலவரலாறு வெளியிட வேண்டும் என்று, ஆணையர் திருமிகு ச.மெய்கண்டதேவன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் திட்டமிட்டார்கள். அத்திட்டத்தின் கீழ் கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் வரலாறும் வெளியிடப்படுகின்றது.

இந்நூலை எழுதும் பணியை எமக்களித்த இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின், மயிலாடுதுறை மாமண்டல இணை ஆணையர் திரு.ப.தனபால், எம்.ஏ.,பி.எல்., அவர்களுக்கும், தக்கார் திரு.எம்.விஜயன் அவர்களுக்கும், செயல் அலுவலர் திரு.எம்.கே.பழனியப்பன், பி.ஏ., அவர்களுக்கும் நன்றி!

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

திருவெண்காடு
07.06.98

அன்பன்,
**த.அகரமுதல்வன்.**

# கேது ஸ்தலம் — நாகநாதன்கோயில்
## *கீழப்பெரும்பள்ளம்*
(பேராசிரியர் த.அகரமுதல்வன்)

பூவுலகை ஆளும் ஓர் அரசன், அமைச்சர் முதலான பல்வேறு அதிகாரிகளைக் கொண்டு தன்னுடைய ஆட்சியை செய்து வருவதைப் போல இறைவன் ஒன்பது கிரகங்களைக் கொண்டு, மக்கள் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப, பலன்களைக் கொடுத்து அருளாட்சி செய்து வருகின்றான். ஒவ்வோர் அமைச்சருக்கும் தனித்தனித் துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதுபோல ஒவ்வொரு கிரகத்திற்கும் தனித்தனி துறைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

### கேதுவின் தன்மைகள்

நவகிரகங்களில் ஒன்பதாமவரான கேது பகவான் ஞானம், மோட்சம், தாய்வழிப் பாட்டனார், பாட்டியார், பெருந்தவம், புனித நீராடல், கட்டடத் தொழில், அயல்நாட்டில் சீவனம், கடின உழைப்பு, வைத்யன், கெட்ட சிநேகம், கல், காயம், வாயு, மௌனவிரதம், பாம்பாட்டி, மான், ஆடு, நாய், ஒட்டகம், கழுதை, கோழி, கோட்டான், பருந்து, பாம்பு, புழு, கொசு, மூட்டைப்பூச்சி, கால், இந்திரிய நாட்டம், மயக்கம், குன்மம், குட்டம், க்ஷயம், வலி, சுரம், தோல்வியாதி, விஷக்கடி, மாந்ரிக வித்தை, சண்டி, காளி, விநாயகர், சிவபெருமான், சித்ராபுத்ரன் ஆகியோரை வழிபடுதல், கைது ஆகும் ஆணை, ஆணை ரத்து ஆதல், சாதிவிட்டு நீக்குதல், அத்திமரம், வெற்றிலைக்கொடி ஆகியவைகளுக்கு காரகனாய் உள்ளார்.

கேதுவுக்கு அதிதேவதை சித்ரகுப்தன்; பிரத்தியதி தேவதை பிரம்மா. இராகு கேது ஆகிய இருவருக்கும் சொந்த வீடு கிடையாது. இருவரும் நிழல் கிரகங்கள் (சாயா கிரகங்கள்) ஆவர். இவர்கள் தாங்கள் இருக்கும் இராசிக்கு ஏற்பவும், சேர்ந்துள்ள கிரகங்களின் தன்மைக்கு ஏற்பவும் பலன்களைத் தருவர்.

கேதுவின் தசைக் காலம் ஏழு ஆண்டுகள், கேதுவுக்கு உரிய நட்சத்திரங்கள் அசுவிணி, மகம், மூலம் ஆகிய மூன்றும் ஆகும். இந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதலில் கேது தசை தொடங்கும். கேதுவிற்கு கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு என்ற பிற பெயர்களும் உள்ளன. கேதுவின் அருள்பெற விநாயகரை வழிபட வேண்டும்.

### கேதுவின் வரலாறு

கேது பிறப்பினால் அசுரன். அவனுடைய இளமைப் பெயர் ஸ்வர்பானு. அவனுடைய தாத்தா காசிப முனிவர்; தந்தை விப்ரசித்து;

தாய் சிம்கிகை. சிம்கிகையின் மகனாதலின் அவனை சிம்கிகேயன் என்றும் அழைப்பர். தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைத் எடுத்தனர். மோகினி உருவில் வந்த திருமால் அமிர்தத்தை தேவர்களுக்கு பரிமாறிக்கொண்டிருந்தார். அப்போது அமிர்தத்தைத் தானும் உண்ண விரும்பிய ஸ்வர்பானு தேவ வடிவெடுத்து சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் சென்றமர்ந்து அமிர்தத்தை வாங்கி உண்டான். இதனைச் சூரியனும் சந்திரனும் மோகினிக்குச் சொன்னார்கள். மோகினி கையில் வைத்திருந்த கரண்டியால் அசுரனின் தலையில் ஓங்கி அடித்தார். அசுரனின் தலை வேறாகவும் உடல் வேறாகவும் ஆயிற்று. தலை, பாம்பு உடலைக்கொண்ட கருநிற இராகுவாகவும், உடல் ஐந்து நாகத்தலைகளுடன் கூடிய செந்நிறமுடைய கேதுவாகவும் ஆயிற்று. பின்னர் இராகுவும், கேதுவும் தவம் செய்து கிரகப் பதவி பெற்றனர். அதற்கு முன்பு இருந்த ஏழு கிரகங்களுடன் இவர்களையும் சேர்த்து நவக்கிரகங்களாக மக்கள் வழிபடலாயினர். கேதுவின் நிறம் சிவப்பென்பதால், இவரைச் செந்நிற மலர்களாலும், செந்நிற ஆடைகளாலும் அலங்கரிப்பர். கலப்பு நிற ஆடைகளாலும் பலவண்ண மலர்களாலும் அணி செய்வதுண்டு. இவருக்குரிய தானியம் கொள்ளு, சமித்து தர்ப்பை, சுவை புளிப்பு, ஆசனம் கொடி வடிவமுடையது. நவரத்தினங்களில் வைடூரியம் இவருக்குரியது. இவருக்கு உச்சவீடு விருச்சிகம்; நீசவீடு ரிஷபம்; திசை வடமேற்கு; சனியும் சுக்கிரனும் இவருக்கு நண்பர்கள். சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய மூவரும் இவருக்குப் பகைவர்கள். இவர் ஜைமினி கோத்திரத்தவர்; கேதுவின் மனைவி பெயர் சித்ரலேகா, கேது அலிக்கிரகம். இவர் மேரு மலையை இடமாக சுற்றிவரக் கூடியவர். இராசி மண்டலத்தில் இவர் அப்பிரதட்சணமாக சுற்றுவார். இவருடைய சந்நிதி நாகை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி வட்டம் கீழப்பெரும்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த நாகநாதன் கோயிலில் உள்ளது.

## *நாகநாதன் கோயில் தலபுராணம்*

தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைய மந்திர மலையை மத்தாகவும், வாசுகி எனும் பாம்பைக் கயிறாகவும் பயன் படுத்தினர். வலி பொறுக்காத வாசுகி நஞ்சைக் கக்கியது. நஞ்சினைக் கண்டு அஞ்சிய தேவரும், அசுரரும் சிவபெருமானை வேண்டினர். சிவபெருமானும் அந் நஞ்சினை எடுத்து உண்டார். பார்வதி அந்நஞ்சு உள்ளேசெல்லாதவாறு தடுக்க, அந்நஞ்சு சிவபெருமானின் கண்டத்தில் தங்கியது. அவர் நீலகண்டர் எனும் பெயர் பெற்றார்.

அமுதம் கிடைக்காத கோபத்தில் அசுரர் வாசுகியை வைக்கோற் பழுதையைப் போல் சுருட்டி எறிந்தனர். அது கடற்கரையினிடத்தில்

இருந்த ஒரு மூங்கிற் காட்டில் வந்து விழுந்தது. உடல் நைந்து உயிர் போகும் நிலையில் இருந்த அப்பாம்பின் வாலில் இருந்து உயிர் தலைக்கேற அது பிழைத்துக்கொண்டது. சிவபெருமான் தன் நஞ்சினை உண்ணுமாறு ஆயிற்றே என உளம் நைந்த வாசுகி அவரிடம் மன்னிப்புப் பெற வேண்டித் தவம் இருந்தது. சிவபெருமான் அதன் தவத்திற்கு இரங்கிக் காட்சி தந்தார். வாசுகி தன் பாவத்தைப் பொறுத்தருள வேண்டியதோடு, தான் தவஞ்செய்த மூங்கிற் காட்டில் கோயில்கொண்டு, அங்கு வந்து வழிபடுவோரின் கேது கிரக தொல்லைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென வேண்டிக் கொண்டது. அவ்வாறே சிவபெருமான் நாகநாதசுவாமி என்னும் பெயர் தாங்கி சௌந்தரநாயகி அம்மையுடன் இங்கு எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றார். வாசுகியின் வேண்டுகோளின்படி கேது கிரக தோஷங்களை நிவர்த்தி செய்கிறார்.

கோயில் இருக்குமிடம் நாகநாதன் கோயில் எனவும், வாசுகி தவம் செய்த இடம் மூங்கில் தோப்பு எனவும் இன்றளவும் பெயர் வழங்கி வருகின்றது. இத்தலத்தின் 'தல விருட்சமும்' மூங்கில்தான். கேது கிரகத் தொடர்பான தோஷங்களை நிவர்த்தி செய்துகொள்ள பொதுமக்கள் இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

## திருக்கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கிய சந்நிதியாக இக்கோயில் அமைந்துள்ளது. கோயிலின் எதிரே நாக தீர்த்தம் எனும் திருக்குளம் உள்ளது. அதன் மேற்கரையில் சந்நிதிக்கு எதிரே அரசும் வேம்பும் உள்ளன. நாகதோஷமுடையவர்கள் இங்கு நாகப் பிரதிஷ்டை செய்யலாம். கோயிலின் நாற்புறமும் உயரமான மதிற் சுவர்கள் உள்ளன. நுழைவாயிலில் கோபுரம் இல்லை. உள்ளே நுழைந்து பிரகாரத்தில் வலமாக வந்தால் மேற்குப் பிரகாரத்தின் திருமாளிகைப் பத்தியில் விநாயகர், வள்ளி, தெய்வயானையுடன் கூடிய சுப்ரமணியர், துர்க்கை, லெட்சுமி நாராயணர், மகேஸ்வரி, கெஜலட்சுமி, ஆகிய தெய்வத் திருவுருவங்களைத் தரிசிக்கலாம். வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவர் சந்நிதியும் துர்க்கை சந்நிதியும் உள்ளன. இங்கு கிணறும், மூங்கிலும் உள்ளன. கிழக்குப் பிரகாரத்தின் திருமாளிகைப் பத்தியில் சனீஸ்வரர், பைரவர், சம்பந்தம், நாகர், சூரியன் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. இங்குதான் மேற்கு நோக்கி நின்ற நிலையில் கேதுபகவான் எழுந்தருளியுள்ளார். உடல் தெய்வ வடிவிலும் தலை ஐந்தலை நாகவடிவிலும், கேது பகவான் காட்சி தருகிறார். இரு கைகளும் வணங்கிய நிலையில் உள்ளன.

சந்நிதிக்கு எதிரேயுள்ள நந்தியையும், பலி பீடத்தையும் வணங்கி மகாமண்டபத்தினுள் செல்லலாம். மகாமண்டபத்தையொட்டி

அமைந்துள்ள கருவறையில் நாகநாதர் இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். கருவறை வாயிலில் உள்ளார் சித்தி விநாயகர். அவரை வழிபட்டபின் அர்த்த மண்டபத்திலுள்ள உற்சவ மூர்த்திகளான பஞ்சமூர்த்திகள், நடராசர் மற்றும் கேது ஆகியவைகளைக் காணலாம். திரும்பி மகாமண்டபத்திற்கு வரும்போது தெற்குநோக்கியுள்ள சந்நிதியில் சௌந்தரநாயகியைத் தரிசிக்கலாம்.

### திருப்பணி

பழமையான கல்வெட்டுக்கள் எதுவும் இக்கோயிலில் இல்லை. 14.5.86ல் இத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா ஒன்று அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.விஜயபாலன் முன்னிலையில் நடைபெற்றதைத் தெரிவிக்கிறது. அப்போது தக்காராக இருந்த திரு.ஆர்.கே.அரங்கநாதன் மிக முயன்று இத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்துள்ளார்.

### நிர்வாகம்

இத் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தில் உள்ளது. தற்சமயம் திரு.எம்.கே.பழனியப்பன், பி.ஏ., செயல் அலுவலராகவும், திரு.எம்.விஜயன் தக்காராகவும் உள்ளனர். கோயில் காலை மணி 7.00 முதல் 12.00 வரையும் மாலை மணி 4 முதல் 8 வரையும் திறந்திருக்கும். நான்கு கால பூசை இங்கு நடைபெறுகின்றது.

### கட்டளை

நித்ய ஆராதனை கட்டளை - ஜெ.பி.நாகராஜன்

JNR ஜுவெல்லரி, மயிலாப்பூர், சென்னை. ரூ.250/- முதலீடு செய்யப் பட்டிருக்கிறது. AA 04131 RT 30492. இதன் வட்டி வருவாய், நித்ய ஆராதனை செலவுகள் செயல் அலுவலர் பராமரிப்பில் நடந்து வருகிறது.

### செல்லும் வழி

சீர்காழியிலிருந்து திருவெண்காடு, தருமகுளம் வழியாக வாணகிரி செல்லும் பேருந்தில் (எண்5) சென்றால் இக்கோயிலுக்குக் கிழக்கே 1 பர்லாங் தொலைவில் இறங்கலாம். சீர்காழியிலிருந்து பூம்புகார்

செல்லும் பேருந்தில் (எண் 5) சென்றால் தருமகுளம் என்னும் இடத்தில் இறங்கி தெற்கே 1 கிலோ மீட்டர் நடந்தோ அல்லது வாகனத்திலோ செல்ல வேண்டும். மயிலாடுதுறையிலிருந்து வாணகிரி செல்லும் பேருந்து 21.சி யில் சென்றால் கோயிலின் அருகிலேயே இறங்கலாம்.

## சுற்றியுள்ள திருக்கோயில்கள்

நாகநாதன் கோயிலைச் சுற்றி நான்கு திசைகளிலும் சிறந்த சிவாலயங்கள் உள்ளன. வடக்கே 6 கி.மீ. தொலைவில் நால்வராலும் பாடப்பெற்றதும், சூரியன், சந்திரன் அக்னி ஆகிய மூவர் பெயரால் முக்குளங்களை உடையதும், சுவேதாரண்யேசுவர், நடராசர், அகோரமூர்த்தி ஆகிய மும்மூர்த்திகளும் பிரம்மவித்யா, காளி, துர்க்கை என மூன்று சக்திகளும் அருள் பாலிப்பதுமான திருவெண்காடு எனும் தொன்மையான திருக்கோயில் உள்ளது. இது புதன் ஸ்தலமும் ஆகும்.

நாதநாதன் கோயிலுக்கு வடக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ள காவிரிப்பூம்பட்டினம் எனும் பூம்புகாரில் பல திருக்கோயில்கள் உள்ளன. அவைகளுள் திருச்சாய்க்காடு எனும் சாயாவனமும் பட்டினத்துப் பல்லவனீச்சுரமும் பாடல்பெற்ற பழம் பதிகளாகும்.

நாகநாதன் கோயிலுக்குத் தெற்கே 15 கி.மீ. தொலைவில் திருக்கடவூர் திருக்கோயில் உள்ளது. மார்க்கண்டேயருக்காக சிவபெருமான் காலனைக் காலால் எற்றிய தலமிது. ஆயுள் வளர்ச்சிக்காக அன்பர்கள் சஷ்டியப்த பூர்த்தி போன்ற சடங்குகளைச் செய்யும் தலமாகவும் உள்ளது. அமிர்தகடேசவரரும் அபிராமி அம்மையும் இங்கிருந்து அருள்பாலிக்கின்றனர்.

நாகநாதன் கோயிலுக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவிலுள்ள திருவலம்புரம் எனும் பாடல்பெற்ற பதியான மேலப்பெரும்பள்ளமும், 5கி.மீ. தொலைவில் தலைச்செங்காடும் உள்ளன.

நாகநாதன் கோயிலுக்கு வடமேற்கில் வைத்தீசுவரன் கோயில் எனும் புள்ளிருக்கு வேளூரும், திருஞானசம்பந்தரின் அவதார ஸ்தலமான சீர்காழியும் உள்ளன. வைத்தீஸ்வரன் கோயில் செவ்வாய் ஸ்தலமும் ஆகும்.

சீர்காழி வட்டத்தில் மட்டும் பாடல்பெற்ற சிவன் கோயில்கள் பதின்மூன்றும் மங்களாசாசனம் பெற்ற திருமால் பதிகள் பதின்மூன்றும் உள்ளன. ஆதலின் நாகநாதன் கோயிலுக்கு வரும் அன்பர்கள் சூழ உள்ள இத்தலங்களுக்கும் சென்று வர வாய்ப்புள்ளது. பூம்புகாரிலும், திருவெண்காட்டிலும் தங்குமிடங்கள் உள்ளன.

## கேது தோத்திரங்கள்

### *கேது தியான ஸ்லோகம்*

தூம்ரவர்ணம் த்விபாஹுஞ்ம் ச கேதும் ச விக்ருதாணனம்
க்ருத்ராஸனகதம் நித்யம் த்யாயேத் ஸர்வ பலாப்தயே// 1

தூம்ரவர்ணம் த்வஜாகாரம் கதாவர கரத்வயம்
சித்ராம்பரதர கேதும் சித்ரகந்தானு லேபனம்// 2

வைடூரியாபரணம் சைவ வைடூர்ய மூகுடோஜ்வலம்
சித்ரம்கபோத மாருஹ்ய மேரும் யாந்தப்ரதசஷிணம்// 3

கேதும் கராலவதனம் சித்ரவர்ணம் கிரீடினம்
ப்ரணமாமி ஸதாதேவம் த்வஜாகாரம் க்ரஹேஸ்வரம்// 4

பலாச புஷ்பஸங்காஸம் தாராஹுாக்ரஹ மஸ்தகம்
ரெளத்ரம் ரெளத்ராத்மகம் கோரம் தம் கேதும் பிரணமாம்யகம்// 5

### கேது பஞ்சவிம்சதி நாத ஸ்தோத்ரம்

ஸ்ரீ ஸ்காந்த புராணத்திலுள்ள இந்த ஸ்தோத்ரத்தில் கேதுவின் 25 திருநாமங்களும் இடம்பெற்றுள்ளன. இதனை ஓதுவார் கேதுவின் அருளைப் பெறுவார்.

ஸ்ரீ கணேசாய நம :

கேது, கால, கலயிதா, தூம்ரகேதுர் விவர்ணக :/
லோக-கேதுர் மஹோ கேது, ஸர்வகேதுர் பகப்ரத:/
ரெளத்ரோ ருத்ர ப்ரரியோ - ருத்ர குரூரகர்மா ஸுகத்தத்ருக்
பலால தூப ஸம்காச சிதர யக்ஞோப - வீதத்ருக்//
தாராகண - விமர்தீ ச ஜைமினேயோ க்ரஹாதிப :/
கணேசதேவோ விக்னேச விஷரோகார்த்திநாசன :/
ப்ரவ்ராஜ்யதோ க்ஞானதம் ச தீர்த்தயாத்ரா ப்ரவர்த்தக
பஞ்சவிம்சதி நாமானி கேதார்ய ஸதகம் படேத்//
தஸ்ய நச்யதி பாதா ச ஸர்வ கேது - ப்ரஸாதக :/
தன தான்ய பசூனாம் ச பவேத் வ்குத்திர் ந ஸம்சய :/

### கேது காயத்ரி

அச்வ த்வஜாய வித்மஹே சூல ஹஸ்தாய தீமஹி
தன்னோ கேது ப்ரசோதயாத்.

### ஸெளந்தர்யலஹரி

த்வதந்ய : பாணிப்யா மமயவரதோ தைவதகண :
த்வமே கா நைவாஸி ப்ரகடித வராபீத்யபிநயா/
ப்யாத் த்ராதும் தாதும் பலமபிச வாஞ்ச்சா
ஸரண்யே லோகாநாம் தவ ஹி சரணா வேவ நிபுணௌ!!

## கேது ஸ்தோத்ரம்

அனேக ரூட வர்ணைஸ சதஸோதே ஸஹஸ்ர ஸ:
உத்பாத ரூபோ ஜகதாம் பீடாம் ஹரது மே சகீ://

## கேது துதி

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி! பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேது தேவே கேண்மையாய் ரட்சி.

மாதுசேர் நெடுமால் முன்னால் மாகிரி வலமே போந்து
நீதியாய் நடுவகுத்து நிறைதளர் தந்தையைச் சீர்க்கும்
மாதுசேய் கதிர்விழுங்கும் சிவன் கையில் சிரமேபெற்ற
கேதுவே உனைத் துதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப் பாயே

# கோளறு பதிகம்

### நவக்கிரக தோஷம் நீங்க

### திருஞான சம்பந்த சுவாமிகள் அருளியது

திருச்சிற்றம்பலம்

*வேயுறுதோளி பங்கன் விடமுண்டகண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்*
*உளமேபுகுந்த வதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி*
*சனிபாம் பிரண்டு முடனே*
*ஆசறுநல்லநல்ல அவை நல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே* 1

*என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க*
*வெருதேறி யேழையுடனே*
*பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென*
*உளமே புகுந்தவதனால்*
*ஒன்பதொ டொன் றொடேழு பதினெட்டொடாறும்*
*உடனாய நாள்களவைதாம்*
*அன்போடு நல்லநல்ல அவைநல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே* 2

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறி நல்லநல்ல வவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 3

மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதுமெங்கள் பரமன்
நதியோடு கொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளானபலவும்
அதிகுண நல்லநல்ல வவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்தனோடும்
விடையேறு நங்கள்பமரன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடுயு மின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோவணவந்தர்
மடவா டனோடுமுடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்தென்
உளமேபுகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 6

செப்பி ளமுலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடி மேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையானபித்தம்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 7

*வேள்பட வழிசெய்தன்று விடைமேலிருந்து*
*மடவா டனோடுமுடனாய்*
*வாண்மதி வன்னிகொண்றை மலர்சூடிவந்தென்*
*உளமேபுகுந்த வதனால்*
*ஏழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடு*
*மிடரானவந்து நலியா*
*ஆழ்கடனல்லநல்ல வவைநல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே.* 8

*பலபல வேடமாகும் பரனாரிபாகன்*
*பசுவேறுமெங்கள் பரமன்*
*சலமகளோ டெருக்கு முடிமேலணிந்தென்*
*உளமேபுகுந்த வதனால்*
*மலர்மிசை யோனுமாலு மறையோடுதேவர்*
*வருகாலமான பலவும்*
*அலைகடல் மேருநல்ல வவைநல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே.* 9


*கொத்தலா குழலியோடு விசையற்கு நல்கு*
*குனமாயவேட விகிர்தன்*
*மத்தமு மதியுகநாக முடிமேலனிந்தென்*
*உளமேபுகுந்த வதனால்*
*புத்தரொ டமணைவாதி வழிவிக்குமண்ணல்*
*திருநீறிசெம்மை திடமே*
*அத்தகு நல்லநல்ல வவைநல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே.* 10

*தேனமர் பொழில்கொளாலை விளைச்செந்நெறுன்னி*
*வளர்செம்பொனெங்கு நிகழ்*
*நான்முக னாதியாய பிரமாபுரத்து*
*மறைஞான ஞானமுனிவன்*
*தானுறு கோளுநாளு மடியாரைவந்து*
*நலியாதவண்ண முரைசெய்*
*ஆனசொன் மாலையோது மடியார்கள்வானில்*
*அரசாள்வ ராணைநமதே.* 11

திருச்சிற்றம்பலம்

---

ஒன்பது கிரகங்கள் தொடர்பான அனைத்துச் சிக்கல்களும் தீர ஒவ்வொரு கிரகத்திற்கும் உரிய பரிகாரங்களை அறிய இந்நூல் ஆசிரியர் முனைவர்.த.அகரமுதல்வன் அவர்களை அணுகவும்.


சூரியன்
சூரியனார்
கோயில்
சுக்ரன்
கஞ்சனூர்
சந்திரன்
திங்களூர்
அங்காரகன்
வைத்தீஸ்வரன்
கோயில்
ராகு
திருநாகேஸ்வரம்
சனி
திருநள்ளார்
கேது
கீழப் பெரும்
பள்ளம்
குரு
ஆலங்குடி
புதன்
திருவெண்காடு

வெளியீடு

**அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்**

**(கேது ஸ்தலம்)**

நாகநாதன் கோயில் (வாணகிரி அஞ்சல்)

கீழப் பெரும்பள்ளம், தரங்கம்பாடி வட்டம் - **609 105.**

நாகை மாவட்டம்

நூலாசிரியர்

பேராசிரியர் முனைவர் **த. அகரமுதல்வன்,** எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,

தமிழ்த்துறைத் தலைவர்

பூம்புகார்க் கல்லூரி, மேலையூர் - **609 107.**

திரு.எம்.விஜயன்,
தக்கார்/ஆய்வர்
செம்பனார்கோயில்

திரு.எம்.கே.பழனியப்பன், பி.ஏ.,
செயல் அலுவலர்

**1998**

விலை-ரூ.**8**/-

---

சதர்ன் பிரிண்டர்ஸ், 2வது மாடி, 11 மகாதானத்தெரு, மயிலாடுதுறை. ☎ 23084